# 14 இறையாட்சியும் நெருக்கடி நிலையில் இறைவாக்குப் பணியும்

சமுதாய நெருக்கடிகளின் மத்தியில் இறைவழிகளை மக்களுக்கு உணர்த்தி, அவர்களைச் சரியான பாதையில் நடத்துவதற்கென இன்றும் இறைவாக்கினர் நம்மத்தியில் தோன்றுகின்றனர்.

யூதர் எருசலேமைவிட்டு நாடு கடத்தப்பட்டு பாபிலோனியாவில் வாழ்ந்த சூழ்நிலையில், 'மக்களின் இறைவாக்கினர்' என எரேமியா கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டார். அம்மக்களை வழிநடத்தும் புரட்சிகரமான பணியில் அவர் திருநிலைப்படுத்தப்பட்டார்.

'பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும் கட்டவும் நாட்டவும், மக்களின் மேலும் அரசர்கள் மேலும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.'(எரேமியா 1:10)

பல நாடுகளில் பல்வேறு மக்கள் அநீதியாக ஒடுக்கப்படும் சூழ்நிலைகளில் இறைவாக்கை அறிந்து, மக்களை மெய்யான விடுதலைப் பாதையில் இட்டுச் சென்ற தற்கால இறைவாக்கினர் சிலரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## பேராயர் ஓஸ்கா ரொமேரோ



மத்திய அமெரிக்காவின் எல்சல்வடோர் நாட்டின் சன்சல் பேராயராக 1977ம் ஆண்டில் பொறுப்பேற்றார். சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்றபொழுது ஆற்றிய சிறு பகுதி :

**'திருச்சபை தன்னை ஏழைகளின் வாழ்வுக்காக அர்ப்பணித்துள்ளது. ஏழைகள் பல்வேறு வழிகளில் ஏமாற்றப்படுகின்றனர். ஏழைகளை ஆதரிப்பதாலேயே இன்று திருச்சபை துன்புறுத்தப்படுகின்றது. ஏழைகளே இன்று திருச்சபையின் உடலாயிருக்கின்றனர். அவர்களின் மூலமே கிறிஸ்து இன்றைய வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.**

மேலும் அவரின் சிந்தனையின்படி, கிறிஸ்தவர்கள் உலகின் இன்றைய நிகழ்வுகளில் முற்றிலுமாக அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். இவ்வாறு நாம் பணி செய்ய வேண்டியது ஏழைகளின் உலகிலாகும். வறிய மக்களே திருச்சபை எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

திருச்சபையில் தேவைப்படுவது போதனைகளும் திருவிருந்து கொண்டாடுவது மட்டுமல்ல; அநீதிச் செயல்களுக்கெதிராகக் குரல் கொடுப்பதே அதன் மேலான பணியாக அமைய வேண்டும்.

அவரது அறிவுரையின்படி, துன்புறுத்தல்களுக்குப் பயந்து பின்வாங்குவதற்கு கிறிஸ்து நம்மை அழைக்கவில்லை. ஏழைகளுக்காக கிறிஸ்தவர்கள் தம்மை அர்ப்பணிக்கும்போது, ஏழைகள் எதிர்நோக்கும் அதே அபாயங்களையும் துன்பங்களையும் ஏற்க வேண்டும். இன்று எல் சல்வடோர் நாட்டில் ஏழைகளின் வாழ்விலே மக்கள் கடத்தப்படல், கைதுசெய்யப்பட்டு காணாமற் போதல், சித்திரவதை செய்யப்படல், கொலை செய்யப்படல் என்பன நாளாந்த நிகழ்வுகளாயிருக்கின்றன. இவற்றுக்கெதிராக திருச்சபை குரல் எழுப்ப வேண்டும்.

ஆயர் ரொமேரோவின் சிந்தனைகளும் அன்று ஆட்சியிலிருந்தவர்களுக்கு பெரும் சவாலாயிற்று. அவர் ஏழைகளின் மத்தியில் செய்துவந்த பணியின் காரணமாக தாம் எதிர்நோக்கும் அபாயத்தை உணர்ந்திருந்தார். தேவைப்படின் அநீதிகளுக்கெதிரான பணியின் நிமித்தம் தம் உயிரையே தியாகம் செய்யவும் அஞ்சாதிருந்தார்.

‘ஒரு கிறிஸ்தவன் என்பதால் நான் உயிர்த்தெழுதல் இல்லாத மரணத்தை நம்புவதில்லை’ என்றார்.

மரணம் எப்போதும் நம்மை உயிர்த்தெழுதலுக்கு இட்டுச் செல்கிறது என்பது அவரின் உறுதியான நம்பிக்கையாகும். இறுதியில் அவர் ஒரு வைத்தியசாலையில் அமைந்துள்ள சிறு ஆலயத்தில் மரித்தவருக்கு நன்றி கூறும் ஆராதனை நடத்திக் கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இறந்தாலும் தொடர்ந்தும் வறிய மக்களின் அபிலாசைகளிலும், எதிர்பார்ப்புகளிலும் உயிர்த்து வாழ்ந்து, இன்றும் அவர்களின் வாழ்க்கைக்கு நம்பிக்கையும் புத்துயிரும் அளிக்கின்றார்.

**பேராயர் ரொமேரோவின் இறுதி வார்த்தைகள்**


‘மானிட மகன் மாட்சிபெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்’. (10 நிமிடங்கள் பேசிய பின்னர்) ‘மக்களுக்காக வழங்கப்பட்ட இயேசுவின் இந்த உடலும் இரத்தமும் நம்மைப் போசிக்கட்டும். அதன் மூலம் நாம் கிறிஸ்துவைப் போன்று எமது உடலையும் தியாகம் செய்து நீதியையும் சமாதானத்தையும் நம் மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே, உறுதியோடும் நம்பிக்கையோடும் இந்த செப வேளையில் ஒன்றிணைவோம்’ என்றார்.

இந்த வார்த்தைகளை அவர் கூறி முடிக்கும்போது வெடிச்சத்தம் கேட்டது. அவர் இரத்த வெள்ளத்தில் மூழ்கி உயிர் துறந்தார். அவர் 24 மார்ச் மாதம் 1980 ஆம் ஆண்டு திருவிருந்து வழிபாட்டின்போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

**செபிப்போம்**

இன்று வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகி கொல்லப்படுவோருக்காக செபிப்போம். அவர்களின் பயங்களை நீக்கியருளும்; துக்கத்தில் ஆறுதல்படுத்தியருளும். அவர்களைப் போலவே உழைக்க எங்களுக்கு அருள் தந்தருளும்
ஆமென்

## டொம் ஹெல்டர் கெமரா



**'ஏழைகளின் ஆயர்'** என்று அழைக்கப்பட்ட இவர், திருச்சபை ஏழை மக்களின் திருச்சபையாய் அமைய வேண்டும் என்ற பேரவா கொண்டிருந்தார். 1964 இல் பிரேசில் நாட்டின் பேராயராக திருநிலைப்படுத்தப் பட்டு. சமாதானத்திற்கான பல பரிசில்களையும் பெற்றவர் இருமுறை நோபல் பரிசுக்காக சிபார்சு செய்யப்பட்டார்.

டொம் குருத்துவத்திற்காக பயிற்றப்படும் நாட்களிலேயே திருச்சபையில் ஒரு புத்தெழுச்சியைக் கண்டார். நாட்டின் பல்வேறு சமுதாயத் தேவைகளிலும் திருச்சபையுடன் அவர் இணைந்து செயற்பட்டவர்.

ஒருமுறை இவரிடம் 'நீர் ஏன் சமுதாய நீதியைப் பற்றியே எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறீர்?' எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவரின் பதில்

'இன்று சமுதாய அநீதியே அதிமுக்கிய விடயமாக இருக்கிறது; அதுவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வேராக இருக்கிறது. எனவே, சமயத் தலைவராக இருக்கும் நான் இவ்வாறான அநீதியான அமைப்பை மாற்றி நீதியான அமைப்பை அமைக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளேன். எனவே, சமுதாய நீதியைப் பற்றி ஒவ்வொரு தருணத்திலும் பேசுகின்றேன். நான் பேசாதிருந்தால் கிறிஸ்துவுக்கு ஏற்புடையவனாக இருக்க மாட்டேன்'


இலவச விநியோகத்திற்காக

இன்னொரு வேளையில் அவர் பின்வருமாறு வினவினார்.

**நமது சனத்தொகையில் 2/3 பங்கினர் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கின்றனர். நாம் இவ்வேளையில் திருச்சபையின் உட்பிரச்சினைகளை மட்டும் பேசிக் கொண்டிருப்பது நியாயமா?**

இவ்வாறு கூறிய ஆயரை பிழையாக விளங்கிக் கொண்டு விடாதீர்கள். அவரின் ஆன்மீகநிலை மிக உயர்மட்டத்தில் இருந்தது. அதிகாலை 2 மணிக்கு எழுந்து தியானத்தில் ஈடுபடுவார்; எழுந்த சிந்தனைகளை 'தியானங்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டார். பேராயர் கெமராவின் காலத்தில் இருந்த இராணுவ ஆட்சியினர் அவரைக் 'கம்யூனிசவாதி' என்று கூறி எதிர்த்தனர். 'சிகப்பு ஆயர்' (ரெட் பிஷப்) என்று சிலர் பெயரிட்டனர். ஆனால் பொதுமக்கள் அவர்பேரில் வைத்திருந்த மதிப்பினால் அவருக்கு தீங்கு செய்ய இராணுவத்தினர் அஞ்சினர். அவருடைய சககுருக்களும் அவரைப் பின்பற்றிய பலரும் அரசினால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.

ஏழைகளில் குரலாய் அமைந்த பேராயர் 'ஏழைகளுக்கு நான் உணவைப் பெற்று வழங்கும்போது என்னை ஒரு புனிதர் என்கின்றனர். ஆனால், ஏன் இந்த மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உணவு கிடைக்கவில்லை என்று கேட்டால் என்னை புரட்சிவாதி என்று அழைக்கின்றனர்' என்கிறார்.

**பேராயர் டொம் நம்பிக்கையற்ற மக்களுக்கு நம்பிக்கை அளிப்பவராக இருந்தார்.**
**'என் மக்களில் பலரும் வாழ்வில் நம்பிக்கை இல்லாதிருக்கின்றார்கள். நம்பிக்கையின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்துவது கடினமாயிருக் கின்றது.; எனினும் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்'**

## அருட்திரு மைக்கல் ரொட்ரிகோ



அருட்திரு மைக்கல் பிரான்ஸ் நாட்டுப் பல்கலைக்கழக மொன்றில் பேராசிரியர் பதவியை ஏற்று அங்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஊவா பகுதி கிராமிய மக்கள் மத்தியில் பணிபுரியும்படி அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தன் திறமைக்கு ஏற்ற சிறந்த பதவி கிடைத்திருக்கும் வேளையில் இது ஏன் என்று சிந்தித்தார். முழு இரவு செபத்தில் தரித்திருந்தார். பின்னர், ‘என் சித்தமல்ல இறைவா, உம் சித்தப்படியே நடக்கட்டும்’ என்று கூறி அந்த அழைப்பினை ஏற்றார்.

ஊவா மாகாண கிராமப் புறத்தில் றோமன் கத்தோலிக்க இளம் குருத்துவ மாணவர்கள் பயிற்றப்படுவதற்கு பயிற்சி நிலையத்தை நிறுவினார். இங்கு குருத்துவ மாணவர்கள் சமுதாய நீரோட்டத்தில் கலந்து முற்றாக ஈடுபாடு கொண்டு, பல்சமய, பல்லின விவசாய சூழலில் பணிபுரிய பயிற்றுவிக்கப்பட்டனர். இதுவே வறிய மக்களுக்கான சபைக்குழுவின் ஆரம்பமாயிற்று.

**பிதா மைக்கலின் தரிசனம், அனைவரும் அனைவரது சுகதுக்கங்களில் பங்குகொண்டு, ஒருவர் மற்றவர்களுக்கும் முழுச் சமுதாயத்திற்கும் பொறுப்பேற்கும் மக்கள் சமுதாயத்தை ஏற்படுத்துவதாகும்.**

இத்தரிசனத்தின் அடிப்படையில் வறிய மக்களுக்கும் சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்குமென ‘நல்லாசி இல்லம்’ என கருத்துப்படும் ‘சுப செத் கெதர’ என்ற நிலையத்தை ஆரம்பித்தார்.

விவசாயிகளின் கல்வி, சுகாதாரம், பிறசமயத்துவருடன் கலந்துரையாடல், மக்களின் சுயநிலைமைகளை புரிய வைத்தல் போன்ற பணிகள் அங்கு நடைபெற்றன.

பிதா மைக்கல் மக்களையும் இயற்கையையும் அதிகம் நேசித்தார். அனைவருடனும் பழகிச் சிரித்து மகிழ்ந்தார். மலைகளின் மேல் தோன்றிய சூரியோதயத்தினை இரசித்த அவர் அதனைச் சித்திரங்களாக வரைந்தார்; கவிதைகளைத் தொகுத்தார்.

அனைவரையும் நேசித்து விடுதலைப் பாதையில் நடத்துவற்கு இறைவனின் நேரடி ஆணையை தான் பெற்றுள்ளதாகத் தெளிவாக நம்பினார். இதுவே அவரை அங்கு எதற்கும் அஞ்சாது தொடர்ந்து பணிபுரிந்து அவரது உயிரையும்

தியாகம் செய்ய வழிவகுத்தது. மக்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றனர் என்றும் அதினின்று விடுதலை பெறுவது எவ்வாறு என்றும் அவர்களுக்கு எடுத்துக் கூறி, அதற்கான செயலில் ஈடுபட செய்தார். அவர்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் எடுத்த நடவடிக்கைகளினால் நட்டத்தை எதிர்பார்த்த தனவந்தர்கள் நட்டமடையத் தொடங்கியதால் இவரின் செயல்களை எதிர்க்கத் தொடங்கினர். தொடர்ந்து அங்கு பணிபுரிவதா என்று இரவு முழுதாகச் செபித்த பின்னர் ஆலயத்தில் திருப்பலி பூசையில் ஈடுபட்டார். ஆயர் ரொமேரோ போன்றே பிதா மைக்கலும் ஆராதனையின்போது சுடப்பட்டார். இயேசுவின் இரத்தத்தை அடையாளப்படுத்திய திருப்பலி இரத்தத்தோடு இவரின் இரத்தமும் கலந்து ஓடியது. இவ்வாறு கிறிஸ்தவ திருச்சபை இன்னொரு இரத்தச் சாட்சியையும் கண்டது.

**அவரின் இறுதி வார்த்தைகள்**

‘வாழ்க்கையில் நிலைத்திருப்பவை அன்பும், மக்களுடன் கொள்ளும் உறவுமாகும். இவையே நித்தியமானவை. பயமடையாதீர்கள்; நம்மைக் கடவுளிடம் ஒப்புக் கொடுப்போம். பிதாவே, என் ஆவியை உமது கரத்தில் ஒப்புவிக்கிறேன்.’

இவ்வார்த்தைகளைக் கூறி முடித்தவுடன் துவக்குச் சூட்டுச் சத்தம் ஒலித்தது. அவர் தமது வாழ்விலும் மரணத்திலும் கிறிஸ்துவின் சீடனாக அவரது அடையாளத்தைத் தரித்திருந்தார்.

**செய்முறை**

**வாசித்து மகிழுங்கள்**

**மலரட்டும் மஞ்சள் மகிமை பூக்கள்**



*பியதிலக அங்கு கிராமத்தில் வாழ்ந்த பையன். ஒரு நாள் மரிகோல்ட் பூ விதைகளைக் கொண்டுவந்து “நல்லாசி” இல்லத்தின் முற்றத்தில் தூவிவிட்டான்.*



*மழைபெய்தது; விதைகள் முளைத்தன. செடிகள் வளர்ந்தன. பூத்த பூக்கள் அங்கு வந்த யாவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தன. ஒருநாள் கிராமத்து மக்களும் அவ்வாறே வாழ்வில் பூத்துக் குலுங்குவர் என்று பிதா மைக்கல் நம்பிக்கை கொண்டார்.*

**பிதாவின் பேனையிலிருந்து**



*நானே விளக்கின் எண்ணெயாகவும், நீரே வாழ்வின் இணையற்ற தீபமாகவும், ஒன்றாய்ச் சேர்ந்து சுடர்விட்டு எரிந்து அழிந்திடுவோம். ஏனெனில் மரணமே புது வாழ்வாகும்*

## பேராயர் லக்ஷமன் விக்ரமசிங்க



இளவயதில் அனைத்து வசதிகளையும் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரத் துறையில் முதல் தர சிறப்பு சித்தி எய்தினார். சிறந்த அறிவாளராக விளங்கிய இவர் பேராதனையிலேயே கற்பிக்கும் வாய்ப்பிருந்தும், இலங்கை திருச்சபையின் குருணாகலை, கண்டி பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் திருப்பணி செய்வதற்கு அழைப்பைப் பெற்றார்.

ஆயர் தூரநோக்குடன் செயற்பட்டார். கிறிஸ்தவர் திருச்சபையின் சுவர்களுக்குள் கட்டுப்படாமல், வெளியுலகில் யாவரின் மத்தியிலும் செயல்பட வேண்டுமென வாதிட்டார். இதற்கென திருச்சபை தற்போது கொண்டுள்ள மேற்கத்திய கலாச்சாரத்தைக் களைந்து தன்னாட்டுமயமாகுதல் அவசியம் என்று வலியுறுத்தினார். மேலும் இவர் சமுதாய சீர்திருத்தவாதியாகவும் மனித உரிமைகள் காப்பாளராகவும் அஞ்சாநெஞ்சுடன் செயல்பட்டார்.

தூய்மை பேணும் புனிதரைப்போல் அவர் சமுதாயத்தை விட்டு விலகி நின்று செயல்படவில்லை. மாறாக சமுதாயத்தில் மூழ்கி நின்று, பல்லின, பல்சமய, பல்தரவகுப்புக்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் செயற்பட்டார். நேர்மையான அரசியல் கருத்துக்களை முன்வைத்து ஆட்சியாளர்களைக் கண்டிக்க வேண்டியபொழுது அதனையும் செய்தார். கம்பீர தோற்றமுடையவராயிருந்தும் யாவரையும் நேசிக்கும் தாழ்மையுள்ள அன்புள்ளம் கொண்டிருந்தார். அவர் புகழை விரும்பவில்லை இருந்தும் அவர் ஆற்றிய பணிகளின் மூலம் மேன்மை அவரை விடாது தொடர்ந்தது.

**செயற்பாடு**

1. பல இன்னல்களின் மத்தியிலும் பிறர்வாழ்வை பாதுகாப்பதற்காக உழைத்த வேறு பலர் யாரென உரையாடி அறியவும்.
2. போரினாலும் கலவரங்களினாலும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம் என்று குழுவாகச் சேர்ந்து ஆய்வு செய்து, செயல் திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும்.
3. வன்முறைகளுக்கு எதிரான கிறிஸ்துவின் சிந்தனைகள் யாவை?